


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஃபோர்டு நிறுவனத்தின் IMG தலைவர் திருமதி கே ஹார்ட், துணைத் தலைவர் (சர்வதேச அரசாங்க விவகாரங்கள்) மேத்யூ கோட்லெவ்ஸ்கி, ஃபோர்டு இந்தியா இயக்குநர் (அரசாங்க விவகாரங்கள்) டாக்டர். ஸ்ரீபாத் பட் மற்றும் உயர் அலுவலர்களை சந்தித்து, ஃபோர்டு நிறுவனம் தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கரூர் மாவட்டக் கழகம் சார்பில் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்கள் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டங்கள்!

கரூர், செப். 13–

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களை வெற்றிபெற வேண்டும் என்ற இலக்கை நோக்கி, கரூர் மாவட்டக் கழகம், மாவட்டத்திற்குட்பட்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி அந்தந்த பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக அவைத்தலைவர்கள் தலைமையிலும் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட, முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

தேதி/நேரம் கழக அமைப்பு இடம்

13.9.2024 காலை 9.00 மணி – பள்ளப்பட்டி நகரம் – சூல்த்தர் அபி புல்லா நியூ ஹால், பள்ளப்பட்டி,

13.9.2024 காலை 9.00 மணி – தாந்தோணி கிழக்கு ஒன்றியம் – எஸ்.கே.டி. திருமண மண்டபம் மணவாடி,

13.9.2024 காலை 10.00 மணி – கரூர் மேற்கு பகுதி – வி.கே.டி. மஹால் தாந்தோணி மலை,

13.9.2024 காலை 10.00 மணி – கரூர் தெற்கு பகுதி – வி.என்.சி.மஹால், காந்தி கிராமம்,

13.9.2024 காலை 10.00 மணி அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் – சங்கம் மஹால் மலைக்கோவிலூர்,

13.9.2024 காலை 10.00 மணி பழைய ஜெயங்கொண்டம் பேரூர் – பாம்பாலம்மன் மண்டபம்– லட்சுமணம்ப ட்டி,

13.9.2024 காலை 10.00 மணி – குளித்தலை நகரம் – மீனாட்சி மண்டபம், அக்ரஹாராம், குளித்தலை

13.9.2024 காலை 11.மணி – அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம் – ஏ.எஸ்.மஹால், செந்திராபுரம்,

13.9.2024 காலை 11.00 மணி – கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம், வெங்கடேஷ்வரா மண்டபம், மாயனூர்.

13.9.2024 மதியம் 12.00 மணி – அரவக்குறிச்சி பேரூர் – எம்.எஸ். மஹால் அரவக்குறிச்சி,

13.9.2024 மதியம் 12.00 மணி – கிருஷ்ணராயபுரம் பேரூர் பி.எஸ். மஹால், கிருஷ்ணராயபுரம்

13.9.2024 மாலை 4.00 மணி – குளித்தலை மேற்கு ஒன்றியம் – எஸ்.என்.எஸ். மண்டபம், இராஜேந்திரம்.

13.9.2024 5.00 மணி – கரூர் மேற்கு ஒன்றியம் – கலைஞர் திடல் சேமங்கி.

13.9.2024 5.00 மணி கரூர்வடக்கு ஒன்றியம் – மகாலட்சுமி மண்டபம் வாங்கல்.

13.9.2024 மாலை 6.00 மணி – கரூர் மத்திய கிழக்கு பகுதி – டி.பி.மஹால் பசுபதிபாளையம்

13.9.2024 மாலை 6.00 மணி – க.பரமத்தி தெற்கு ஒன்றியம் – வி.கே.டி.மண்டபம் எல்லமேடு,

13.9.2024 மாலை 6.00 மணி கடவூர் தெற்கு ஒன்றியம் – அய்யானார் திருமண மண்டபம் பாலவிடுதி.

13.9.2024 மாலை 6.00 மணி நங்கவரம் பேரூர் – நங்கவரம், சாத்தாண்டி அம்மன் கோவில் அருகில்,

13.9.2024 இரவு 7.00 மணி – க.பரமத்தி மேற்கு ஒன்றியம் – ஒன்றிய கழக அலுவலகம் தென்னிலை

13.9.2024 மாலை 7.00 மணி கரூர் மத்திய பகுதி – காவேரி அம்மாள் திருமண மண்டபம், உழவர் சந்தை அருகில்,

13.9.2024 இரவு 7.00 மணி – கரூர் மத்திய மேற்கு பகுதி – எஸ்.கே.டி. மஹால் வேலுச்சாமிபுரம்.

14.9.2024 காலை 10.00 மணி – கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம் – தனம் திருமண மண்டபம், வேங்காம்பட்டி

14.9.2024 காலை 11 மணி – கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் – கலைஞர் திடல், கிழக்கு களம் பஞ்சப்பட்டி

14.9.2024 – மதியம் 12.00 – கடவூர் மேற்கு ஒன்றியம் – வசந்தம் மஹால் சிந்தாமணிப்பட்டி

14.9.2024 – மதியம் 1.00 தாந்தோணி மேற்கு ஒன்றியம் – ஒன்றிய கழக அலுவலகம் ரெட்டிபாளையம்

14.9.2024 மாலை 6 மணி – கரூர் கிழக்கு ஒன்றியம் – ராசி முருகன் மண்டபம், வெண்ணமலை.

15.9.2024 காலை 100 மணி – கரூர் வடக்கு பகுதி – பகுதி கழக அலுவலகம், வெங்கமேடு

15.9.2024 காலை 10.00 மணி – புலியூர் பேரூர் – கலைஞர் திடல் காளிபாளையம் புலியூர்.

15.9.2024 மாலை 4.00 மணி குளித்தலை கிழக்கு ஒன்றியம் – கணபதி நகர் கார்டன், அய்யர்மலை

15.9.2024 மாலை 5.00 மணி – புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் – மலையம்மன் மண்டபம் தளவாபாளையம்

15.9.2024 மாலை 5.00 மணி – மருதூர் பேரூர் – எஸ்.என்.எஸ். மண்டபம், இராஜேந்திரம்

15.9.2024 மாலை 6.00 மணி புகழூர் நகரம் – புகழி திருமண மண்டபம், வேலாயுதம்பாளையம்

15.9.2024 இரவு 7.00 மணி – க.பரமத்தி வடக்கு ஒன்றியம் – ஒன்றிய கழக அலுவலகம், க.பரமத்தி

16.9.2024 காலை 10.00 மணி கடவூர் வடக்கு ஒன்றியம் – ஒன்றிய கழக அலுவலகம், தளபதி அரங்கம், காணியாளம்பட்டி

16.9.2024 மாலை 4.00 மணி – தோகை மலை மேற்கு ஒன்றியம் – கண்ணாயி காமாட்சி மண்டபம், தோகைமலை.

16.9.2024 மாலை 5.00 மணி தோகை மலை கிழக்கு ஒன்றியம் அன்பு மண்டபம், காவல்காரன் பட்டி

மேற்கண்டவாறு கூட்டங்கள் நடைபெறுகிறது என மாவட்டக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தி.மு.க. பவள விழா - முப்பெரும் விழா!

# நாகை மாவட்டம் முழுவதும் இல்லங்கள்தோறும் கழகக் கொடி பறக்கட்டும்!

## மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



*நாகை, செப். 13 -*

நாகை மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளரும் , தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

பேரறிஞர் அண்ணா கண்ட திராவிட முன்னேற்றக் கழகம், தனது 75வது ஆண்டினை பவள விழாவாக கொண்டாடி மகிழ்ந்து வருகிறது.

அந்த வகையில் நாகை மாவட்டம் முழுவதும் உள்ள மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள்,ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள். கழக முன்னோடிகள், செயல் வீரர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஒட்டு மொத்த கழகத்தினர் அனைத்து கிளை களிலும் உள்ள கழகக் கொடிக் கம்பங்களை புதுப்பித்தும், புதிய கொடி கம்பங்களை அமைத்தும் கழகத்தின் இலட்சிய இருவண்ணக் கொடியை கம்பீரமாக ஏற்றிட வேண்டும் என்றும்,

அத்துடன் கழகத் தொண்டர்களால் தான் இந்த பேரியக்கம் 75 ஆண்டுகளை கடந்து கம்பீரமாக பீடுநடை போட்டு வருகிறது என்பதை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டிடும் வகையில், கழகத் தோழர்களின் அனைவரின் வீடுகளிலும் கழக கொடியை பட்டொளி வீசி பறக்கச் செய்திட வேண்டும்.

“கட்டுக்கோப்பான தொண்டர்கள் நிறைந்த இயக்கம் தி.மு.க.” என்பதை நாட்டு மக்களுக்கு பறை சாற்றிடும் வகையில் கழகத்தினர் அனைவரின் இல்லங்களிலும் கழகக் கொடியை கம்பீரமாக ஏற்றி, தி.மு.கழக பவள விழாவை கழகத்தினர் குடும்ப விழாவாக கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்றும் கழகத்தினர் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டம், ஏற்காடு ஒன்றியம் பொது உறுப்பினர் கூட்டம் தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் ராஜா ( எ) ராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ. ஏ. ஆறுமுகம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


# வருக! வருக!

## செப். 2024

பெரியார் பன்னாட்டமைப்பின் தலைவரும் அமெரிக்காவில் புகழ்பெற்ற மருத்துவரும் சமூகநீதி ஆர்வலருமான சோம. இளங்கோவன் அவர்கள், ‘‘அமெரிக்காவில் அய்ம்பது ஆண்டுகள் - ஒரு பகுத்தறிவுவாதியின் பயணம்’’ என்ற தன்னுடைய நூலை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழங்கினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்று மருத்துவர் சோம.இளங்கோவன் கவிதை வருமாறு:–






**மாணவராய்த் துடிப்பு**
**இளைஞராய்ப் படிப்பு**
**உழைப்பால் உயர்ந்தே**
**முதல்வராய் இருக்கை!**

**செறிவானத் திட்டங்கள்**
**சிறப்பாக நிறைவேற்றித்**
**தமிழரின் பொற்காலம்**
**தரணியே போற்றுதே!**

**திராவிட மாடலே**
**உலகை வெல்லுமே!**
**1971–ல் முத்தமிழ் அறிஞர்**
**2024–ல் முத்துவேலரின் பேரர்**
**கலைஞரின் வார்ப்பு**
**தமிழரின் தளபதி!**

**பெரியார் பன்னாட்டின்**
**வீரமணி விருதை**
**வழங்கியே மகிழ்ந்தோம்!**
**வருக சிகாகோ**
**வந்து பாருங்கள்**
**கொடிகட்டிப் பறக்கின்றோம்**
**நெஞ்சமெல்லாம் தமிழ்தான்!**
**வருக! வருகவே! வாழ்க வாழ்கவே!**



**மருத்துவர் சோம.இளங்கோவன்**
பெரியார் பன்னாட்டமைப்பு
அமெரிக்கா